# வளரிளம் பருவமாற்ற புரிதலுக்கு தோழமையுடன் துணை புரிவோம்

வளரிளம் பருவம் என்பது குழந்தைகளின் வாழ்க்கையில் முக்கியமான, மென்மையான, உறுதியான ஒரு கட்டமாகும். இக்காலக்கட்டத்தில் அவர்களுக்கு பெரியோர்களின் துணையும் கவனமும் அதிக அளவில் தேவைப்படுகிறது. பொதுவாக அவர்களுக்கு உடலளவிலும் மனதளவிலும் ஏற்படும் மாற்றங்களை எதிர்கொள்ள அவர்கள் தயாராக இருப்பதில்லை. அவர்களுக்குள் தோன்றும் இம்மாற்றங்கள் உலகில் பிறந்த அனைத்து உயிர்களுக்கும் நிகழும் இயற்கையான ஒரு செயல் தான் என்பதை எடுத்துரைத்து சரியான முறையில் வழிகாட்டுவது அவசியமாகிறது.

இந்த வயதில் இயற்கையாக ஏற்படும் உடல் மாற்றங்கள், காதல் உணர்வு, திருமணம் மற்றும் உறவுகள் தொடர்பான குழந்தைகளின் சந்தேகங்களைப் பற்றி பெரியோர்களுடனோ, பெற்றோர்களுடனோ ஆசிரியர்களுடனோ உரையாட இந்நாளில் சரியான வாய்ப்புகள் இல்லை. ஆனால் குழந்தைகளின் இக்குழப்பங்களைக் வெளிப்படையாகப் பேசி அவர்களுக்கு புரிதலை வலுவாக்க வேண்டியது அவசியம்.

மாணவர்கள் வளரிளம் பருவத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விவாதிக்க ஏதுவாக இந்திய அரசு ‘சாத்தியா’ என்ற ஒரு கல்வித்திட்டத்தைத் தொடங்கியுள்ளது. அத்திட்டத்தின் ஒரு பகுதியாக மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளைச் சக மாணவர்களோடு உரையாட ஏற்ற வகையில் கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் பாலியல், சுய மற்றும் இனவிருத்தி சுகாதாரம், ஆரோக்கியமான வன்முறையில்ல வாழ்க்கை போன்றவற்றைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளும் அவற்றை விவாதிக்கத் தேவையான கேள்விகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு அரசு உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் சுகுமாறன் அவர்கள் தனது கருத்துக்களை இக்கட்டுரையின் வாயிலாக நம்முடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

**ஆய்வறிக்கை** 1

சரிதா ஒரு மகிழ்ச்சியான பதின்மூன்று வயது சிறுமி. அவளுக்கு பதினைந்து மற்றும் பன்னிரண்டு வயதில் இரு சகோதரர்கள் உள்ளனர். அவள் பள்ளியில் அனைவருக்கும் மிகவும் அறிமுகமானவள். அவள் கபடி விளையாடும்போது மற்ற மாணவர்கள் கூட இவளோடு போட்டியிட தயங்குவார்கள். அவள் கபடி, கபடி, கபடி என்று எதிரணியை மூச்சு விடாமல் ஆர்வத்துடன் விளையாடுவாள். இதனால் மற்ற விளையாட்டு வீரர்கள் இவளின் அணியில் சேர விரும்புவார்கள். ஆனால் சில நாட்களாக, அவளுடைய பாட்டி அவளை விளையாட அனுமதிக்கவில்லை. பாட்டி சரிதா அம்மாவிடம் ஏன் உன் மகள் வெளியில் சுற்றித் திரிகிறாள்? மெதுவாக செல்லமாட்டாளா? என்றும், அவளுக்கு துப்பட்டாவுடன் கூடிய சுடிதாரையே அணிய கூறினார். ஒரு மாலைப் பொழுதில், சரிதா நண்பர்களுடன் விளையாடக் கூடாது. அன்று இரவிற்கான உணவு சமைக்க வேண்டும். மேலும் பாட்டியைக் கவனித்துக் கொள்ளுமாறு தாய் கூறினார். சரிதா மறுத்தபோது, அவளின் தாய், அவளைப் பக்கத்து வீட்டிற்கு ஓய்வு நேரத்தில் மட்டும் செல்லுமாறு கூறினார். அப்பொழுதும் தன் தந்தைக்கு கம்பளிச்சட்டைத் தைக்குமாறும் கூறினார். ஆனால், சரிதாவின் சகோதரர்களுக்கு எந்த ஒரு வீட்டு வேலையும் இல்லை. மேலும் அவர்கள் விருப்பம் போல் நண்பர்களுடன் வெளியில் ஓய்வு நேரத்தில் செல்லலாம். சரிதாவிற்கு ஒரே கவலையும் குழப்பமும். சரிதா ஒரு கண்ணாடியின் முன்பு நின்று கொண்டு நான் வேறுபட்டவளா? எவ்வாறு நின்றாள் வேறுபட்டவள்?

**எனது கருத்து**

பொதுவாகக் கபடி மட்டுமல்ல வேறு எந்த ஒரு விளையாட்டாக இருந்தாலும் வயதான பாட்டிகள் பேத்திகளை ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு வெளியில் சென்று விளையாட விடுவதில்லை. காரணம் அவர்கள் பூப்பெய்தும் காலத்தில் இருப்பதால்.

மேலும் கபடி ஆண்கள் விளையாடும் விளையாட்டு என்ற ஒரு கருத்து உள்ளது. கபடி பெண்களுக்குப் பொருத்தமற்றது என்று கருதி, அவ்விளையாட்டை விளையாடத் தடைவிதிக்கும்படி சரிதாவின் அம்மாவிடம் கூறுகிறார் பாட்டி.

பொதுவாகப் பூப்பெய்தும் பருவத்தில் அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டும் என்பதே பாட்டிகளின் கருத்து. மேலும் உடை விஜயத்தில் பெண்கள் கவனமாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சரிதாவின் பாட்டி சல்வார்கமிஸ் அணியச் சொல்கிறாள்.

பெண்கள் விண்வெளி பயணத்தை மேற்கொள்ளும் காலத்தில் நாம் இருக்கின்றோம். மேலும் பல பெண்கள் விளையாட்டுகளில் சாதிப்பதையும் பார்க்கிறோம். இக்காலக்கட்டத்தில் பெண்ணுரிமையைத் தடுக்கும் பாட்டி சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றுதான்.

இந்த நவீன உலகத்தில் பெண்கள் நவீன உடைகளை உடுத்துகின்றனர். ஆடைக்கட்டுப்பாடு கலாச்சாரத்திற்கு உகந்ததாக இருக்கலாம்; ஆனால் நடைமுறைக்கு அல்ல.

இவ்வகையாக கட்டுப்பாடுகள், சரிதாவை தான் பெண்ணாகப் பிறக்காமல் ஆணாகப் பிறந்திருக்கலாமே என்று எண்ணத் தூண்டும். தன் சுதந்திரம் பறிபோகிவிட்டதே என வருந்துவாள். தன்னைச் சார்ந்தவர்களிடம் கோபமும் வெறுப்பும் உண்டாகும்.

பூப்பெய்தலுக்குப் பின் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் பெண்களுக்குப் பிடிப்பதில்லை. தனது தந்தை சகோதரர்களிடம் கூட நெருங்கி முன்புபோல் விளையாட முடியாத சூழலை வெறுப்பார்கள். இவைமட்டுமின்றி, சரிதா தன் தாய் மீதும் பாட்டி மீதும் வெறுப்புற்று இருந்தாள்.

இவற்றைத் தவிர்க்க சரிதா பெரியோர்களிடமும் தனது ஒத்த சக வயதுடைய ஏற்கனவே பூப்பெய்திய பெண்களுடனும் பேசுவது அவசியமாகிறது. இது உணர்வு பூர்வமான விஷயம் என்பதால் கவனமாக இருப்பது முக்கியம்.

**ஆய்வறிக்கை 2**

திலீப் மற்றும் ஜாகீர் இருவரும் நெருக்கமான நண்பர்கள். அவர்கள் ஒன்பதாம் வகுப்பு படிக்கிறார்கள். இருவரும் ஒரே வயதுடையவர்கள். ஆனால், கடந்த ஒரு வருடத்தில் ஜாகீர் திலீப்பைவிட உயரமாகவும், சிறு மீசை அரும்புகளுடனும் இருக்கிறான். திலீபின் உயரத்தைப் பார்த்து வகுப்பிலுள்ள மற்ற மாணவர்கள் கேளி செய்தார்கள். இதனால் திலீப் கவலையுடனும், நண்பர்களுடன் வெளியில் செல்வதையும் தவிர்த்தான். ஜாகிர், திலீப்பிற்கு ஆறுதல் கூறியும், அவனுடைய கவலைகளைப் பகிர்ந்துகொண்டான். மேலும், ஜாகீரும் தனக்கு, கனத்த குரலும், மீசை அரும்பும் உள்ளதால் தானும், சிரமமாக உணர்வதாகவும், திலீப்பைப் போலவே தானும் உணர்வதாகவும் கூறினான்.

**எனது கருத்து**

ஜாகிர் மற்றும் உசேன் இரண்டு பேருக்குமே வளர்பருவ மாற்றம் தான் ஏற்படுகிறது. இம்மாற்றம் நபருக்கு நபர் மாறுபடும். இம்மாற்றம் நெருங்கிய நண்பருக்குள் ஒரு இடைவெளியைக் கண்டிப்பாக ஏற்படுத்தும்.

உயரமாக வளர்வது, மீசை, தாடி துளிர்ப்பது போன்றவை இவ்வயதில் உள்ளவர்களுக்கு நிச்சயமாக ஒரு பிரச்சனையாகத் தான் இருக்கும். காரணம் தனது ஒத்த வயதுடைய ஒருவனுக்கு ஒரு ஆண் மகனுக்கான அடையாளங்கள் தெரியும்போது தனக்கு அவ்வாறு வளர்ச்சி இல்லையே என்ற வருத்தம் ஏற்படும். இது பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும்.

நிச்சயமாக ஜாகிர் தனது நண்பன் சிறு பிள்ளைப்போல் இருப்பதை பார்க்கும்போது தனக்கு வயதாகிவிட்டதோ என்கிற எண்ணம் தோன்றும். மேலும் தனது குரல் பெரிய ஆண்மகன் போல மாறியதாலும் முகத்தில் தாடி, மீசை வேகமாக

வளர்த்து வருவதாலும் அவனுக்குக் குழப்பம் தோன்றும். ஒவ்வொரு முறையும் அதனை வழித்து விடும்போது தனக்கு ஏன் இவ்வாறு வளர்ந்தது என்ற வெறுப்பும் சிறிது காலத்திலேயே வந்து விடும்.

ஒருவரின் வளர்பருவ மாற்றத்தினைக் கண்டு சிரிப்பது முட்டாள் தனமே. ஏனென்றால் இது அனைவருக்கும் நிகழும் உடலில் ஏற்படும் மாற்றமே.

திலீப் வயதுக்குறிய மாற்றம் வரவில்லை என்பதால் கண்டிப்பாக இதைப்பற்றித் தெரிந்தவர்களிடம் கேட்க முயற்சி செய்வான். ஒரு வேளை தனக்கு சகோதரன் இருந்தால் அவனிடம் கேட்க முயற்சிப்பான். பெரிய வயது வித்தியாசம் உள்ளவருடன் நிச்சயம் கேட்கமாட்டான்.

வளர்பருவ மாற்றத்தைப் பற்றிப் பேசவேண்டிய அவசியம் பெண்பிள்ளைகளுக்கு மட்டுமல்ல ஆண்பிள்ளைகளுக்கும் உண்டு.



**இ. சுகுமாறன்,**
அ.மே.ப. ஆலங்குப்பம்,